(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 51.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, நவெம்பர் 25, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0479/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாகம் யாதென்பதையும்,

(ii) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வரும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல் விவகாரங்களின் எண்ணிக்கையையும்,

(iii) விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மற்றும் அவற்றின் பெயர்கள் என்பவற்றையும்,

(iv) விசாரணைகளின் இற்றை வரையிலான பெறுபேறுகள் யாதென்பதையும்,

(v) வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும் ஒவ்வொரு வழக்கும் எப்போது தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0495/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இந்தப் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவை வழங்கவும், கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கொடுப்பனவு ஒன்றைச் செய்யவும் தற்போதைய அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றதா என்பதையும்,

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0547/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த புதமின்கட்டு பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0630/ '10

4.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.07.20 ஆம் திகதியளவில் மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய்க் கிணறு அகழ்வுப் பணிகளின் நிலமை யாதென்பதையும்,

(ii) இந்தியாவின் கெயான் கம்பனியுடன் எண்ணெய் கிணறுகளை அகழ்வது தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்ட மொத்த நிலப்பரப்பில் கெயான் கம்பனிக்கு வழங்கப்பட்ட நிலப் பரப்பின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) அந்த உடன்படிக்கையின் பிரகாரம் அக்கம்பனி அகழ்வுகளை முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய திகதி யாதென்பதையும்,

(v) குறிப்பிட்ட தினத்தில் அகழ்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்படாவிடின் உடன்படிக்கையின் பிரகாரம் எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக் கம்பனியின் கணக்கு நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், குறிப்பிட்ட உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி தொடக்கம் 2010.07.20 ஆந் திகதி வரையிலான கணக்கு அறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(iii) அந்தக் கணக்கறிக்கைகளை மீளாய்வு செய்யும் பொருட்டு இலங்கையில் பொறுப்புக் கூறக் கூடிய ஏதேனும் நிறுவனம் உள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், அதன் பெயர் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0643/ ‘10

5.

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வேலையற்ற அழகியற்கலைப் பட்டதாரிகளுக்கு தொழில்கள் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டிருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் தொழில்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் அழகியற் கலைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நித எவ்வளவு என்பதையும்,

(iii) ஆட்சேர்ப்புக்கு ஏற்புடைய விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(iv) ஆமெனில், மேற்படி நேர்முகப் பரீட்சைகளில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இவர்களில் தொழில்கள் வழங்கப்படுவோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் மற்றும் நிறைவுபெறும் திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0758/ ’10

6.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை பொது வைத்தியசாலையின் புதிய சத்திர சிகிச்சைத் தொகுதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இப்புதிய சத்திர சிகிச்சைத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியும் பூர்த்தி செய்யப்பட்ட திகதியும் யாவையென்பதையும்,

(iii) மேற்படி சத்திர சிகிச்சைத் தொகுதியின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், அதனைத் திறந்து வைத்தல் இதுவரையில் தாமதிக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இப்புதிய கட்டிடத்தினை விரைவில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அது திறந்து வைக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இப்புதிய சத்திர சிகிச்சைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காகவும் வளிச்சீராக்கி மற்றும் ஏனைய அடிப்படை உபகரணங்களைப் பொருத்துவதற்காகவும் செலவிடப்பட்ட பணத்தொகையினை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0761/ '10

7\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் VoIP சர்வதேச தொலைபேசிச் சேவைகள் தொடர்பில் ரெலிகொம் ஏஷியா நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) இதற்கு ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் முன் அனுமதி கிடைத்ததா என்பதையும்,

(iii) இந்த உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு முன்னர் சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்காக ஒரு நிமிடத்திற்கு (US $) 0.075 அமெரிக்க டொலர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்குக் கிடைத்ததா என்பதையும்,

(iv) இந்த உடன்படிக்கை காரணமாக, மேற்படி தொகை ஒரு நிமிடத்திற்கு (US $) 0.069 அமெரிக்க டொலர் வரை குறைந்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு 2009 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதத்தில் முதல் தடவையாக பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மேற்படி பிரேரணையை சட்டம் மற்றும் நிதி ரீதியிலான விடயங்களினடிப்படையில் நிராகரித்ததா என்பதையும்,

(iii) ஆமெனின், அந்நிறுவனத்தை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்தது யார் என்பதையும்,

(iv) மேற்படி உடன்படிக்கை பொது நடைமுறைகளுக்கு முரணாக கையொப்பமிடப்பட்டதா என்பதையும்,

(v) மேற்படி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன் மூலம் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0482/ '10

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகரசபை இறுதியாக எப்போது தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதையும்,

(ii) இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட மாநகர பிதா மற்றும் பிரதி மாநகர பிதா ஆகியோரின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விசேட ஆணையாளர் ஒருவர் எப்போது நியமிக்கப்பட்டார் என்பதையும்,

(ii) ஊழல் காரணமாக சபை எப்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டதென்பதையும்,

(iii) முதலமைச்சருக்கு அறிக்கை எப்போது வழங்கப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) குற்றப்பத்திரிகை மற்றும் இனங்காணப்பட்ட குற்றங்கள் மீதான குழு அறிக்கை ஆகியவை சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்,

(ii) விசேட ஆணையாளர் ஒருவரை நியமிப்பதற்குப் பதிலாக முதலமைச்சரால் தேர்தல் ஒன்றிற்குச் செல்ல முடியவில்லையா என்பதையும்,

(iii) உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டப்படவிருக்கின்றார்களா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0496/ '10

9.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் குழந்தைகளது போஷாக்கு மட்டம் தொடர்பாகவுள்ள தற்போதைய புள்ளி விபரங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி புள்ளி விபரங்களின் பிரகாரம் குழந்தைகளின் போஷாக்கு மட்டம் திருப்திகரமான நிலையில் உள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0548/ '10

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இறக்கண்டி பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0631/ '10

11.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தெற்கு கரைகடந்த பிரதேசத்தில் உள்ள 02 வண்டல் படுக்கைகளில் எண்ணெய் வளம் இருப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பெறுபேறு என்னவென்பதையும்,

(ii) மேற்படி ஆய்வுகளின் எழுத்திலான தகவல்கள் / குறிப்புக்கள் இருப்பின் சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(iii) மேற்படி ஆய்வுகள் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனம் அல்லது பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் என்னவென்பதையும்,

(iv) அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பொறுப்புக்களை ஏற்கும் இலங்கை விஞ்ஞானிகள் இருக்கின்றார்களா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்தத் தெற்குக் கரையின் பெற்றோலிய வளம் தொடர்பாக இந்தியா அல்லது வேறு ஏதேனும் நாடொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அதை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(iii) இன்றேல், எதிர்காலத்தில் இந்தியா அல்லது வேறு ஏதேனும் நாடொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட அரசு தீர்மானித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0483/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகரசபையில், கழிவுப்டபொருட்களைச் சேகரிப்பதற்கு நாளொன்றிற்கு ஏற்படும் மொத்தச் செலவையும்,

(ii) நாளொன்றிற்கு சேகரிக்கப்படும் தொன் அளவையும்,

(iii) சேகரிப்பதற்காக தொன் ஒன்றிற்கு அறவிடப்படும் தொகையையும்,

(iv) கொழும்பு மாநகரசபையில், கழிவுப்பொருட்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள கம்பனிகளையும்,

(v) கழிவுப்பொருட்கள் சேகரிப்பதற்கும் அகற்றுவதற்கும் தேசியத் திட்டம் மேல்மாகாணத்தில் அமுல்படுத்தப்படுமா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபை,

(ii) மகரகம நகரசபை,

(iii) மொறட்டுவ மாநகர சபை மற்றும்,

(iv) தெஹிவளை - கல்கிசை மாநகர சபை ஆகியவற்றில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான செலவுகளை

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0497/ '10

13.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இன்று உள்ள கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கு நிலை பற்றி கிடைக்கப்பெற்றுள்ள தற்போதைய புள்ளிவிபரங்கள் யாவை என்பதையும்,

(ii) அத்தரவுகளுக்கு அமைய கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கு நிலை திருப்திகரமான மட்டத்தில் உள்ளதா என்பதையும்,

(iii) அந்த கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0549/ '10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இரளிதுலாய் பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப்பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா வென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0633/ '10

15.

கௌரவ அநுர திஸாநாயக்க,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்குப் பிரதேசத்திலுள்ள யுத்தத்தினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இப்பிள்ளைகளில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இவர்களில் தற்போது பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பெற்றோரை இழந்த மேற்படி பிள்ளைகளுக்காகவும் இவர்களில் பாடசாலை செல்லாத மாணவர்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"இலங்கைப் புவிச்சரிதவியல் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட மூன்றாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2010, நவெம்பர் 22) [1].

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத் தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 6.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 16.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

17.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.